<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அ.வ.எண். 23/2024

பெயர் – பிரபு(வா.சா.2)

நாள் – 10.04.2026

<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

வழக்கின் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு அத்தை முறையாகும். பிரதிவாதி ஆலீஸ்மேரி எனது பெரியம்மா ஆவார், பாக்கியபிரதீப் எனது ஆலீஸ்மேரியின் மகன் ஆவார். ஸ்டேல்லாமேரி அழைத்தன் பேரில் தான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். ஸ்டேல்லாமேரி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆர்.சி தெருவில் உள்ள வீட்டிற்காக உயில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டதை ரத்து செய்வதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

ஸ்டேல்லாமேரிக்கு தபசில் சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் 2009ம் ஆண்டு மைக்கேல் என்பவரிடம் எனது அத்தை ஸ்டேல்லாமேரி கிரையம் வாங்கி பின்பு எனது அத்தையும், சுவீகார தாயார் ஞானசௌந்தரி சேர்ந்து இவ்வீட்டை கட்டியுள்ளார்.

இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி உரிய சட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப தான் உயிலை தயாரித்தார்கள் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் அவர்களது கடமைகளை சரிவர செய்து வந்துள்ளார்கள் என்றும், எனவே 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.